கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி மனோரஞ்சிதம் அவர்கள்.

திருமதி மனோரஞ்சிதம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊத்தங்கரை தொகுதி, ஊத்தங்கரையில் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் கிருஷ்ணகிரி மாவட்டம், தருமபுரி மாவட்டம், திருவண்ணாமலை மாவட்டம் மற்றும் வேலூர் மாவட்டம் ஆகிய நான்கு மாவட்டங்களிலிருந்தும் மாணவர்கள் வந்து கல்வி பயில்கின்றனர். இந்தப் பள்ளி சிறந்த பள்ளி என்பதால், அதிகமான மாணவர்கள், அதாவது, 2,400-க்கும் மேற்பட்ட மாணவர்கள் படிக்கின்றனர். கூடுதல் கட்டடம் கட்டப்படும் என அறிவித்ததற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட நாள் கோரிக்கையாக இருந்த ஊத்தங்கரை தொகுதியின் 33 ஏரி கால்வாய் இணைப்பை நிறைவேற்றிக் கொடுத்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) என் தொகுதி மக்களின் சார்பாகவும், என் குடும்பத்தின் சார்பாகவும் கோடானு கோடி நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 207, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

207—

உள்நாட்டு மீனவர்களுக்கு வீடுகள்

***53860—திரு. என். முருகுமாறன்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2015 செப்டம்பர் 2]

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதியிலுள்ள உள்நாட்டு மீனவர்களுக்கு வீடுகள் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு முழுவதும் உள்ள மீனவர்களிடமிருந்து வீடுகள் கோரி பெறப்பட்ட விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு, தகுதியானவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சரின் பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ், வீடுகள் கட்ட மீன் வளத் துறைமூலம் பரிந்துரைக்கப்பட்டு வருகிறது. அவ்வகையில், காட்டுமன்னார்கோவில் தொகுதியிலுள்ள உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக உள்ள மீனவர்களிடமிருந்து வீடுகள் வேண்டி பெறப்பட்ட 29 விண்ணப்பங்களில் தகுதி வாய்ந்த 2 விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சரின் பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையின்மூலம் வீடுகள் கட்டி வழங்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.

திரு. என். முருகுமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மடமையை மாய்த்து, கொடுமையை சாய்த்து, அநீதியை அகற்றி, ஆணவத்தை இடுப்பொடித்து, (மேசையைத் தட்டும் ஒலி) ஈன வாழ்வை உருக்குலைத்து, துள்ளிவந்த துரோகங்களையெல்லாம் கிள்ளி எறிந்துவிட்டு, சதுராட நினைத்த சதிகளைச் சாய்த்து, சரித்திரப் புகழ்கொண்ட மகத்தான வெற்றி பெற்று, ஐந்தாவது முறையாக மகுடம் சூட்டிக்கொண்ட எங்கள் மகாராணி, (மேசையைத் தட்டும் ஒலி) வாழ்கின்ற ஜான்சி ராணி, மாட்சிமைகள் நிறைந்த தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொன்மலர் பாதங்களைப் பணிவோடு வணங்குகிறேன்.

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதியில் வீராணம் ஏரி, கொள்ளிடம் ஆறு போன்ற இடங்களிலும் மற்றும்

பல்வேறு குளங்கள், ஆறுகளிலும் மீன்பிடித் தொழில் செய்கின்ற உள்நாட்டு மீனவர்கள் மிகவும் ஏழ்மையானவர்கள். சொந்தமாகப் பட்டா உள்ள மீனவர்களுக்கு பசுமை வீடுகள் கட்டித் தருவதற்கு அரசு இசைவு தந்திருக்கிறது. சொந்தமாகப் பட்டா இல்லாத மீனவப் பெருமக்களுக்கு, லால்பேட்டை பேரூராட்சியில், மீன் வளத் துறைக்குச் சொந்தமாக உள்ள இடத்தில் வீடுகள் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன். மேலும், லால்பேட்டையில் மீன் விற்பனை வளாகம் ஒன்றை அமைத்துத் தருவதற்கு ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன் வளத் துறையின் மூலமாக உள்நாட்டு மீனவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. அதுமட்டுமல்ல, காட்டுமன்னார்கோவில் தொகுதியில் 5 உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. அவற்றில் உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை 1,117 ஆகும். கடந்த 2013-2014 ஆம் ஆண்டில் காட்டுமன்னார்கோவில் தொகுதிக்குட்பட்ட சிதாமலையில் உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு இரண்டே இரண்டு பசுமை வீடுகள்தான் கட்டப்பட்டன. மேலும், 2014-2015 ஆம் ஆண்டு I.A.Y. திட்டத்தின்கீழ் 10 வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. காட்டுமன்னார்கோவில் தொகுதியிலுள்ள உள்நாட்டு மீனவர்கள் வீடு கேட்டு விண்ணப்பிக்கும்பட்சத்தில், அவர்கள் மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினராகவும், குறைந்தபட்சம் 300 சதுர அடி சொந்தமாகப் பட்டா நிலம் உடையவர்களாகவும் இருப்பின், தகுதியின் அடிப்படையில், மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையின்மூலம் செயல்படுத்தப்படும் மாண்புமிகு முதலமைச்சரின் பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டித் தர பரிந்துரைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மீன் விற்பனை வளாகம் ஒன்று அமைத்துத் தர வேண்டுமென்று கேட்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை ஆய்வுக்கு

2015 செப்டம்பர் 2]

எடுத்துக்கொள்ளப்பட்டு, வாய்ப்பு இருப்பின், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.

திரு. என். முருகுமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொண்டு மனப்பான்மையும், தொலைநோக்குப் பார்வையும் ஓட்டுக்காக அல்ல, நாட்டுக்காக என நாட்டை ஆள்கிற (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் மீன் வளத் துறையின் மூலமாக பரிசீலனை செய்து, வாய்ப்பு இருப்பின், மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையின்மூலம் வீடு கட்டித் தருவதற்கும், வணிக வளாகம் கட்டித் தருவதற்கும் ஆவன செய்யப்படும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் நன்றி சொல்லி அமைகிறேன், நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 208, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

208—

புயல் பாதுகாப்பு இல்லங்கள்

***52289 திருமதி ம. சக்தி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியிலுள்ள முதலைமேடு ஊராட்சி மற்றும் சந்தைப்படுகை, பில்படுகை, நாணல்படுகை ஆகிய கிராமங்களில் புயல் பாதுகாப்பு இல்லங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?